# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி.பி. 2019 கடகம் (20-7-1988) ஓர் உருபா (இதழ் எண்: 107)


# உ.த.மு.க. தூண்கள் அனைவரும் சிறைப் பிடிக்கப் பட்டுள்ளனர்!

## தென்னவன்கோ (இராவணன்), ஈகவரசன், பொழிலன், முத்துக்குமரன், முகிலன், இளமாறன், ஆறுமுகம், இளமுருகன், சீனி.செந்தேவன், குணத்தொகையன், தெய்வமணி, சுகுமாறன், வியனரசு-முதலியோர் அனைவரும் சிறையில் வாடுகின்றனர்!

## காவல் துறையினரின் கொடுமைகள்!

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# இவர்களை ஆளவிட்டால் நாடு சுடுகாடாகும்!

- அதியமான் -

இந்த நாடு விடுதலையடைந்து நாற்பது ஆண்டுகள் முடிந்து விட்டன. விடுதலைப்போர் நடந்து கொண்டிருக்கும் போது, ஆங்கிலேயன் போய் விட்டால், நாட்டு மக்கள் வளத்தோடு வாழ்வர் என்றனர். இன்று ஆண்டுக்கு ஆண்டு வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழும் மக்கள் கூடிக்கொண்டே இருக்கின்றனர். 1947-க்கு முன் வாழ்ந்த குடிசை வீட்டில்தான் இன்னும் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் குடிசையையும் சிலர் விற்றுப் பிள்ளைகளைப் படிக்கவைத்து விட்டு வேலையில்லா மக்களோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். வேலைகேட்டலைந்தால், ஓர் இலக்கம் வரை கை யூட்டுத் தருகிறாயா? எனக்கேட்கும் அதிகாரிகளும் அரசியல் விரகர்களும் பெருகி விட்டனர். பொருள்களின் விலைஏற்றத்தால் சாரஉணவு இல்லாமல் சாகும் மக்கள் கூட்டம். உடுக்க உடையின்றிக் கந்தல்களை உடுத்திக் கொண்டு அலையும் அவலநிலை. ஊதியம் பெறுவோர் ஊதிய நாளன்றே கடன் வாங்கும் பற்றுக்குறை. கடன வாங்கி உழவுத் தொழில் செய்து விட்டு அப்பொருளைச் செலவுத் தொகைக்குக் கூட விற்க முடியாதபடி கடனில் அழுத்தப்பட்டு விளைவித்தவனே பட்டினி கிடந்து உழலும் சீரழிவு. அந்தக் கடன், இந்தக் கடன் கிடைக்கும் என அரசியற் கட்சிக்காரர்களின் கூற்றிற்கு ஏமாறும் ஏழைகள். கோடையில் தண்ணீர் தண்ணீர் என்றலையும் தாய்க்குலம். இப்படி மக்கள் வாழ்வதற்கு அலைமோதிக் கொண்டிருக்கும் போது, மக்களுடைய ஒப்போலைகளை வாங்கிப் பதவியில் அமர்ந்து கொள்ளையடிக்கத் துடிக்கும் அரசியல் நடிகை நடிகர்கள் உலாவர அழகுப் பாதைகளை இங்கு அமைத்து மகிழ்ந்து கொண்டு திரிகிறார்கள், இந்நாட்டு அரசியல் வழக்கர்.

'எனக்குப் பிள்ளைகிடையாது எனக்கேன் செல்வம்?' எனக்கூறிய தமிழ்நாட்டு மறைந்த முதல்வர் ம. கோ. இரா. (M.G.R) 100 கோடிக்குச் செல்வங்களைக் கொள்ளை அடித்து வைத்து விட்டு மாண்டு போனார். அச் சொத்துகள் யாருக்கு என்ற போராட்டத்தில் மனைவியும், மாற்று மனைவியும் சண்டை போட்டுக் கொண்டு அக் கட்சியை இரண்டாக்கிக் கொண்டு மக்களைச் சூதாட்டக் காய்களாய்ப் பயன்படுத்தி ஆடிக் கொண்டிருக்கிறார்கள். அதில் ஒருவர் **செயலலிதா** நடிகை ஒருபார்ப்பாத்தி. இவரும் தனக்குப் பிள்ளைகளும், கணவர்களும் இல்லை எனக்கோ செல்வத்தின் மீது அவாக் கிடையாது எனக் கூறிக்கொள்கிறார். பதவிக்காக அலைகிறார்; எத்தனைக் கோடிகளைக் கொள்ளையடிக்கவோ? இந்தப் பார்ப்பினி நடிகை, பார்ப்பனரின் தீச் செயல்களைச் சுட்ட ஆரியமாயை எழுதிய அறிஞர் அண்ணாவின் கொள்கைகளைப் பின்பற்றப் போகிறாராம். ம. கோ. இரா. இறந்தபோது இவர் உடன் கட்டை ஏற எண்ணினேன் என்ற பார்ப்பனச் சட்டத்தைப் பேசியவர். அண்ணாவின் பாதை இதுவா? மக்கள் ஏமாறுகிறார்கள், எனவே எப்படியும் பேசுகிறார்கள்.

1988-ஆம் ஆண்டு ஏப்ரல் 30-ஆம் நாள் அந்த அம்மையார் நெல்லை மாவட்டத்தில் உலாவர இருந்தார். அதற்காக இந்நகர் அழகு செய்யப் பட்டது. ஓட்டை உடைசல் சாலைகள் இரவோடு இரவாகச் சீர் செய்யப்பட்டுத் தூசிகள் அகற்றப்பட்டன. வெளியூர்களில் இருந்து கலைஞர்களைக் கொண்டுவந்து, பல வகையான மின் விளக்கு வண்ணக் கோபுரங்களை கட்டி அழகாக்கினர். இவை ஒன்றிரண்டல்ல; பல. 29, 30 ஆகிய இரு நாட்களிலும் அக்கோபுர விளக்குகள் எரிந்து கொண்டு பணத்தைச் சாம்பலாக்கிக் கொண்டிருந்தன. பதினைந்து நிமையங்கள் அவரேறிப் பேசும் மேடை வளிக் கட்டுப்பாடு (Air Condition) செய்யப் பட்டிருந்தது. கண் கவரும் மின் விளக்குகள் அம் மேடையை அழகு செய்தன.

இவற்றை உருவாக்கப் பலஇலக்க உருபாய்கள் வீணடிக்கப் பட்டிருந்தன. ஏன் இப்படிச் செய்யப் பட்டன? அம்மையார் கண்டுமகிழ, வேடிக்கைப் பார்க்கவரும் மக்களை எங்களுக்கு மக்கள் கூட்டம் மிகுதி என பிற கட்சிகளுக்குக் காட்டிக்கொள்ள. அக்காலத்தில் ஆங்கிலேயன் கூட இவ்வாறு செய்தது கிடையாது. ஆள்பவன் எப்படி இருக்கவேண்டுமென வள்ளுவர் கூறுகிறார்.

> காட்சிக் கெளியன் கடுஞ்சொலன் அல்லனேல்
> மீக்கூறும் மன்னன் நிலம்.

காண எளியனாய்க் கடுஞ்சொல்கூறானாய் இருத்தல் இன்றியமையாமை. இக்குறள் ஒரு வேளை அவ்வம்மையாருக்கும் தெரியாதிருக்கலாம். அவருடைய தொண்டர்களும் அறியார். இதையெல்லாம் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய தேவையும் இல்லை. சுவரொட்டிகளிலும், சுவர்களிலும் அந்த அம்மையார் படித்து மகிழத்தக்க பல பட்டங்கள் எழுதப்பட்டிருந்தன. ***புரட்சி செல்வி, புரட்சித் தலைவி, வருங்காலமுதல்வர், ம. கோ. இரா. வின் அரசியல் வாரிசு, தமிழ்நாட்டு இந்திரா, சான்சி இராணி*** இன்னும் என்னவெல்லாமோ எழுதப்பட்டிருந்தன. பட்டங்களுக்குப் பொருளே இல்லாமற் போயிருந்தன. சுவர்களில் வெற்றிடமே இல்லை. யாவும் நிரப்பப்பட்டிருந்தன. இது போலவே

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# வழக்குத் தொடராமல் காலம் நீட்டிப்பதா ஆளுநரின் அடக்குமுறை ஆட்சி!

## சிதம்பரமும் மூப்பனாரும் ஏவி விட்டனரா? தமிழின உணர்வையே அடியோடு அழிக்க அரசு உறுதி பூண்டுள்ளதா?

## பாவலரேறுவை சேக் அப்துல்லாபோல நிலையாகச் சிறையில் வைக்க சூழ்ச்சி நடக்கிறது!

நம் இளைஞர்கள் சிலர் அரசுக்குத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்த வகையின் உண்மை எதுவோ, தெரியவில்லை. ஆனால் அதைச் சாக்காக வைத்துக் கொண்டு, அரசுக்கு நல்ல பிள்ளைகளாக நடந்து கொள்ள விரும்பும் நம் காவல் துறையினர், துடிப்பும் தூய தொண்டுள்ளமும் துணிவும உள்ள நம இளைஞர்களைத் தங்கள் விருப்பம் போல் அடித்துத் துன்புறுத்தி யிருக்கின்றனர். சிலரை அவர்களின் பெற்றோர் முன்னிலையிலும் தாக்கி யிருக்கின்றனர்.

சிங்களவன் தமிழரை இலங்கையில் கொடுமைப் படுத்துகிறான், இந்தியப் படை அவர்களைச் சீரழிக்கின்றது என்றால், அது வேறு நிலை. மாற்றார் இனத்துக்கு நம்மினத்தின் மேல் உள்ள எரிச்சலால் நேர்ந்த செயல்கள் அவை என்று நம்மால் பொருள் விளங்கிக் கொள்ள முடிகிறது. ஆனால், நம்மவர்களே நம்மை — அதுவும் இத் தமிழினத்திற்காகப் பாடுபடும் நம் இளைஞர்களைத் — தம் விருப்பம் போல் அடித்துத் துன்புறுத்தியிருக்கிறார்களென்றால், அதன் பொருளை நம அறியக் கூட வில்லை ஒருவேளை தமிழின உணர்வே இவர்களை விட்டு விலகி விட்டதோ? தெரியவில்லை.

அண்மையில், கிணறு வெட்ட பூதம் போல் கிளம்பும், சென்னை, திருவான்மியூர் குடிகாரக் கூத்தடிப்பு நிகழ்ச்சிகளுக்குத் துணையாக இருந்த காவலதுறை, நம இனமான முயற்சிகளை எதிரிக் கண்ணோட்டத்துடன் பார்த்துப் பழிதீர்த்துக் கொள்வது இராசீவ் இனத்தின அரத்தக் கலபபால் நேர்ந்த விளைவுகளோ என ஐயுற வேண்டியுள்ளது. இல்லெனில் இளமாறன் போலும் தூய இனமான வீரர்களைத் திருச்சியில் தலைகீழாய்க் கட்டித் தொங்க விட்டு அடித்திருக்க மாட்டார்கள். இத்தனைக்கும் அவர்கள் மீறி மீறி என்னதான் செய்து விட்டார்கள்? திருவான்மியூர் சங்கரைப் போல எத்தனைப பேர்களை இவர்கள துள்ளத் துள்ளக் கொலை செய்தனர்? அல்லது எத்தனைப் பெண்டிரைக் கற்பழித்திருந்தனர்? அல்லது எத்தனை இளம் பெண்களை விற்பனை வணிகத்தில் ஈடுபடுத்தினர்? கணக்குச் சொல்ல முடியுமா, காவல்துறையினர்? இன்றைய முழு விடணக் தலைவர்களான வெறும் சிதம்பரத்தையும, மூப்பனாரையும் அருணாசலத்தையும், பி. பி. அரங்கசாமியையும் நிறைவு படுத்துவதற்காக இவர்கள் இத்தனைக் கொடுமைகளையா செய்ய வேண்டும்? கொடுமைகள் அளவுக்கு மீறியன; நாயமற்றன; உண்மைக்குப் புறம்பாயிருந்தன.

இனி, பல்லடத்துத் தென்மொழி அறிஞர் **முத்துக்குமரனும்**, வினைஞர் **ஆறுமுகமும்** நமக்கு மிக நெருங்கிய கொள்கைத் துணைவர்களாக இருக்கிறார்களே, அவர்களைக் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள், என்று மனவேக்காடுற்ற இனமான உணர்வுக் குறையுடையார் எவரேனும் காவல் துறைத் தலைமையிடத்துக்குச் சொல்லி, பழிதீர்த்துக் கொண்டிருக்க வேண்டும். பின் எதன் பொருட்டு அவர்களையும், அவர்களைச் சார்ந்த இளம் உணர்வாளர்களையும் பிடித்துச் சிறைவைத்தனரோ, நமக்கு இன்னும் விளங்க வில்லை. இனி, எங்கோ ஓரிடத்து எடுத்த வெடி பொருள்களை எல்லாருக்கும் பங்கு போட்டுப் பகிர்ந்து அனைவர்க்கும் சமவுடைமை பேணியிருப்பதும் காவல்துறையினருக்குக் கைவந்த கலையாயிற்றே! பிடிபட்ட எல்லாருமே வெடிபொருள்கள் வைத்திருந்தனர் என்பதை நம்பவும் முடியவில்லை; ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை.

குண்டு வைத்திருந்ததாகக் காவல் துறையினர் செய்தியில் வெளிப்படுத்தியிருக்கும் இளைஞர்கள் அனைவருமே அதுபற்றி ஒன்றும அறியாதவர்கள். சிலா குண்டுகளைப் பார்த்தும் இராதவர்கள்; துமுக்கி (துப்பாக்கி)யைத் தொட்டும் அறியாதவர்கள். ஏதோ அவர்களுக்கு ஒலி முழக்கம் இடத் தெரியும்; கொள்கை உரைகளை ஆற்றத் தெரியும். அவ்வளவுதான்! அவர்களிடம் போய் இத்தனை வெடி பொருளகள் இருந்தன என்றால்,

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

# இரண்டாம் அலைவரிசையா? இரண்டக அலைவரிசையா?

முதல் அலைவரிசையில் ஒளிபரப்பாகி வரும் தொலைக்காட்சி இதுவரை மாநில நலன்களுக் கென்றே பயன்படுத்தப் படுவதில்லை. அப்படி ஏதோ மாநிலத் தொடர்புடைய காட்சிகள் சில, சில நேரங்களில் ஒளி பரப்பப் பட்டாலும், அவையும் இந்தி பேசும் வட மாநிலங்களாகவே இருக்கும் எப்பொழுதோ சிறு சிறு தூறல்களைப் போல் சில காட்சிகள், எங்கோ இந்த இந்தியாவில் தென் மாநிலங்களும் இருக்கின்றன என்பதை மெய்ப்பித்துக்காட்டு வதற்காக ஒளிபரப்பாகும்.

இப்படி இருக்கையில்தான், தயங்கித் தயங்கி, 2-ஆவது அலைவரிசையைக் கொண்டு வந்தார்கள். இதையாவது மாநிலங்களுக்கு விட்டுக் கொடுப்பார்களா என்று கேட்டதும் ஏங்கியதும்தான் மிச்சம்.

இரண்டாவது அலைவரிசை வந்தபின்னாவது, வேண்டாத இந்தித் தலைவலிக்குப் பகரமாக நம் தமிழ் ஒளிபரப்பையாவது பார்க்கலாமே என்றால், வடநாட்டு இந்தி அரசு, மிகக் கரவாக இந்தி நேரத்தில் கை வைக்காமல் நம் தமிழ் ஒளிபரப்பு நேரத்திலேதான் கை வைத்திருக்கிறது.

முதல் அலைவரிசையில் வரும் தமிழ் நிகழ்ச்சிக்கு மாற்றாகத்தான் 2-ஆவது அலைவரிசை நிகழ்ச்சியை, அஃதாவது மாலை 6.30 முதல் 8.30 வரை, ஒளிபரப்புகிறார்களே தவிர, இந்தி நிகழ்ச்சியான 9-மணியிலிருந்து இதை ஒளிபரப்பினால் என்ன? அத்தனைக் கரவாக, இந்தி நேரம் குறையாமல் பார்த்துக் கொள்கிறார்கள், வட நாட்டு - மக்கள் பகை அரசை ஆள்பவர்கள்.

இந்த ஒரு சான்றை வைத்தே அவர்கள் மாநில நலன்களுக்கு மாறாக நடப்பதை மெய்ப்பித்து விடலாம். சரி, இதுதான் போகட்டும் என்றால், அந்த இரண்டு மணி நேர 2-ஆவது அலைவரிசை நிகழ்ச்சிகளிலும் 45 விழுக்காடுதான் தமிழுக்கு! 30 விழுக்காடு ஆங்கிலமாம்! இஃதென்ன ஆங்கிலேயர்கள் நாடா, ஆங்கிலத்திற்கு அத்தனை நேரம் ஒதுக்க? ஆங்கிலந் தெரிந்தவர்களும் இருக்கிறார்களே என்றால், அதை இந்திநேரத்தில் ஒதுக்குவதுதானே!

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பார்கள். அதுபோல் தமிழ்தானா ஊருக்கு இளைத்தது?

இனி, மீதி 25 விழுக்காட்டு நேரம் தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமசுக்கிருதம் என்று தலைக்குக் கொஞ்சம் பிடுங்கல்!

இனி, இன்னொரு கரவான செய்தி என்னவென்றால், விரும்பும் சில நிகழ்ச்சிகள் இரண்டு

## உழவர்களே உழத்தியரே.

— பறம்பை அறிவன்.

உழவர்களே! உழத்தியரே!
உழைக்கும் வேர்வைக் குலத்தினரே!
ஆலையிலே கரும்பாகப்
பிழியப்படும், பாட்டாளி இனத்தினரே!

தமிழருமை தெரிந்தவரே
தாயன்பு உடைய உடன்பிறப்பே,
அமிழ்ந்துவரும் கலமெனவே
அழிந்து வரும் தமிழ் இனத்தவரே,
எதிர் படலையை மீறியே
எழுச்சியுறு தமிழினமே, தமிழினமே.

'விதி'யினை நொந்தே
வீழ்ந்து கிடக்கும் உடன்பிறப்பே.

அடிமை யுணர்வை
அப்புறத்தே தள்ளி, நீ, எழுச்சியுடன்
இடியைப் போலெழு!
மின்னெனத் தாக்கி, நீ நின்றிடு.

வாயருமை போதும்!
செயலருமை காட்டியே சேர்ந்திடு!
புடலொருமை கண்டதனைப்
போர்க்களத்தின் பகையைத் தூசாக்கு!

## அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு!

அண்மையில் தென்மொழி, தமிழ்நிலம், உ.த.மு.க. அன்பர்களிடையிலும், இதழ் விற்பனையாளர்களிடையிலும் காவல் துறை ஆய்வுகள் பல வகையிலும் நடந்துள்ளனவாகவும், இன்னும் நடைபெற்று வருவனவாகவும் நாங்கள் அறிய வருகிறோம்.

அவ்வாறு ஆய்வு செய்யப் பெற்ற அன்பர்கள், நண்பர்கள், அது தொடர்பான, நாள், ஆய்வு செய்யப் பெற்ற முறை, தொடுக்கப் பெற்ற வினாக்கள், கொடுக்கப் பெற்ற விடைகள், இடம் முதலியவற்றை எங்களுக்கு விளக்கமாகவும் விரிவாகவும் அன்புடன் எழுதியனுப்பக் கோருகிறோம்.

சென்னை | 15-7-88

ஆசிரியர்.
தென்மொழி

(முன் பத்தி தொடர்ச்சி)

அலை வரிசைகளிலும் ஒளிபரப்பாகுமாம்! அது என்ன விரும்பும் நிகழ்ச்சி! அது பார்ப்பனருக்குச் சார்பான நிகழ்ச்சிகளைத் தவிர, வேறு எவையாக இருக்க முடியும்?

வாழ்க, பார்ப்பனியம்! வளர்க முதலாளியம்!

— ஈட்டி.

Scanned with CamScanner

# மகனைத் தேடி ...!

## (ஒரு. தாயின் வஞ்சினக் கனவு)

- நற்றிணை-

அன்புடன் அரவணைத்து வளர்த்தேன் என் மகனை! அறிவூட்டி வளர்த்தார் அவன் தந்தை! மொழிப் பற்றும், நாட்டுணர்வும் இன நலனுமே அவன் குருதி அணுவில் கலந்து, கருவிலேயே ஊறிப் பிறந்தவன் அவன்.

அவன் எண்ணம் எல்லாம் உழைக்கும் மக்களை உயரவிடாமல் சுரண்டி வாழும் கொள்ளைக் காரர்களின் அடக்கு முறையையும் அதிகாரத்தையும் ஒழிக்க வேண்டும் என்பதே!

அடக்கப்பெற்று உழைக்கும் மக்களின் உழைப்புக்கு உண்மை நலனையும் நல்வாழ்வையும் கொடுப்பதற்காகவே போராட்டக் களத்தில் குதித்தான் என் மகன்!

இன்று அவன் *"தீவிரவாதி!" "நக்சலைட்" "நாச கும்பல்"* என்று கொக்கரித்துக் காட்டுகிறது அரசியல் கும்பல்.

"கொஞ்சும் மழலைச் செல்வமே கொடியேந்தும் மன்னன்" என்று பெரும் தலைவனைப் போல் முழங்கித் திரியும் கொம்பர்கள், பிஞ்சு மனங்களில் நஞ்சை வார்த்து இளமைத் துடிப்பை அடக்க முனையும் கயவர்கள்.

அவர்கள் வாழ்கின்ற இன்பமான ('சொகுசான') 'ஆடம்பர' வாழ்க்கைக் கல்லறைக்கு வழி கேட்டுப் பசுமையான நிழல் தரும் மரம் செடி கொடிகளை வெட்டி வீழ்த்துகின்றனர்.

எத்தனை எத்தனைக் கொள்ளையர்கள்!
கொழுப்பேறி திரியும் கொலைகாரர்கள்!
பழுப்பேறித் திரியும் பணமுதலைகள்!
தினவெடுத்துத் திரியும் எத்தர்கள்!
ஏய்த்துப் பிழைக்கும் வஞ்சகர்கள்;

வேளைக்கொரு உடையும், நாளுக்கொரு விடுதியுமாக, நினைவற்று மயங்கித் திரியும், கோமாளிகள்! மணக்கின்ற பூச்சுகளும் எக்களிப்பும் எகத்தாளமும் கொண்டு உலாவரும் உலுத்தர்கள் வாழ்கின்ற இந்நாட்டில், என் மகன் ஒரு *'தீவிரவாதி'யாக 'நக்சலைட்'டாக*, மக்கள் விழித்தெழ வழிகாட்டும் *'நாசகும்பலில்'* ஒருவனாக, புரட்சியின் தீப்பிழம்பாக, இருப்பது எனக்குப் பெருமையினும் பெருமையே!

காக்கிச் சட்டை அணிந்து, காக்கின்ற பதவிக்காக வாங்குகின்ற கையூட்டில் மிதக்கின்ற காவலர்-கள், வீடின்றி வெட்ட வெளியில் படுத்துறங்கும் ஒட்டிய வயிறுகளை — வேலையின்றி ஓடாய்க் காய்ந்து கிடக்கும் சருகுகளைக் காலால் எட்டி உதைத்துத் தடியால் அடித்து நொறுக்கிக் கம்பி எண்ண வைக்கும் காவலர்களை ஈன்றவர்களும் தமிழ்த் தாய்மார்கள்தாமோ? அய்யோ! தமிழகமே! மாட மாளிகையில் கூத்தடிக்கும் தீவிரமான பெருச்சாளிகள் பண வலையில் பதுங்கிக் கொண்டு வாழ்கின்ற போது,

இந்தியத் தேசிய நீரோட்டம் என்ற பெயரில் எம் மக்களின் பிணத்தின் மேல் ஏறிக் கொம்மாளமிடும் கொடுங்கயவர்கள் பேயாக அரசாளுகின்ற போது - வெளி நாட்டில் பணத்தை முதலீடு செய்து தேக்கி வைக்கும் போலித் தலைவனை நாட்டைக் குட்டிச் சுவராக்கும் போது, வெயர்வை, புழுதி படியாமல், நறுமணம் குறையாமல், மேனி குலுங்காமல் பணம் பதுக்கும் திருடர்கள் வாழ்கின்ற போது, அவர்கள் நலனுக்காகவே காவலர் உழைக்கும் போது, இத்தமிழ் நாட்டில்,

என் மகனுக்கு ஓர் இடம் கிடைப்பது ஏது? தன்மானத்தை இழந்து, தவிக்கும் எந்தமிழினத்தின் விடிவு நோக்கி எதிர்க்கும் **என் மகனையா, காவலர்களே, நீங்கள் தேடி அலைகின்றீர்கள்? உங்கள் உடன்பிறப்பை! உங்கள் மண்ணின் மைந்தனை! உங்கள் குருதியோடு கலந்த தமிழனை, வலை வீசித் தேடுகிறீர்கள்?**

தேடுங்கள்! தேடுங்கள்!

நன்றாக மலை, வான், காடு, கழனி, கடல், ஆறு, குளம் எங்கெங்குச் சென்றாலும், நம் தமிழர் வீரம் பரந்து விரிந்து கதை சொல்லும் இடமெல்லாம் தேடுங்கள்!

ஓ காவலர்களே! நம் தமிழினத்தையே காக்க வேண்டிய நீங்கள் உங்கள் வேட்டைக்கத்தை என்று அடக்குமுறை அரசை நோக்கித் திருப்புகிறீர்களோ, என்று உங்கள் தமிழுணர்வு தன்னுணர்வைப் பெற்று உங்கள் கைவிலங்கை முதலில் உடைத்தெறிகின்றீர்களோ —

அன்றே நம் இனம் விடிவுபெறும்! மலர்ச்சியுறும்! பணமுதலைகள் நசுக்கப் பெற்று ஏழை மக்கள் வயிறு குளிர்ந்து வாழ்வு பெறுவர்!

**வாழ்க தமிழினம்! வாழ்க ஏழை எளியோர்! ஒழிக அடக்குமுறை! ஒழிக அரசியல் பித்தலாட்டம்!**

---

### அன்பர்கள் கனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

— அமைச்சர்.

Scanned with CamScanner

# தமிழகத்தில் புதிய குடியரசுப் புரட்சி!

நில உருவாக்கங்களுடன் பிண்ணிப் பிணைக்கப்பட்டு இருந்த கைவினைஞர்களுடனுன உறவு வெட்டி எறியப்பட்டுச் சிற்றூர்ப்புறத் தன் விளைவை இழந்து வெளியே விளைவு செய்யப்பட்டு வரும் சரக்குகளை நம்பியிருக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டது. இங்கிலாந்துக்கு மூலப் பொருட்களை விளைவு செய்யும் தளமாக தமிழகம் மாற்றப்பட்டது. பிரிட்டிசு கொண்டு வந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் சாதிய நிலக் கிழமை அடிப்படைகளை உடைக்கவில்லை. நிலக் கிழமைச் சாதிய குமுக அமைப்பின் பிற்போக்கான கூறுகளைப் பாதுகாக்க உதவி உழவு விளைவின் வளர்ச்சியையும், தமிழக முழுமைக்குமான பொருளியல் முன்னேற்றத்தை முழுவதுமாகத் தடுத்து நிறுத்தி விளங்கத் தொடங்கின.

தமிழக உழவு உருவாக்கத்தில் வளர்ந்த வணிக முதலீடு (பட்டறைத் தொழில், கைத்தறி போன்ற சிறு உருவாக்கத்திலிருந்து உருவான முதலாளியக் கூறுகள்) தொடக்கக் காலம் முதல் பிற்போக்கான நிலக் கிழமை நலன்களுடன் சேர்ந்து வளர்ந்ததால் நிலக் கிழமை உறவுகளை உடைத்தெறிய முடியவில்லை. மாற்றார் ஆளுமையால் நசுக்கப்பட்டு வந்த இந்தப் பிரிவு பிரிட்டிசு முதலாளி இனத்தின் ஒட்டுணி முதலாளி இனமாக உருமாறியது. இம் முதலாளி இனத்தைப் பிரிட்டிசுக்கு ஊழியம் செய்யும் தரகு முதலாளிய இனமாக மாற்றியது. அதே சமயத்தில் பிரிட்டிசாரின் தொழில் உருவாக்க முறை, கல்வி, அறிவியல் கலைப்பண்பு, இலக்கியம் ஆகியவற்றைக் கற்றுக் கொடுக்க ஊக்குவித்தது. ஆனால் இப்போக்கு உலக நாடுகளின் இலக்கியங்களைப் படித்துத் தெரிந்து கொள்ள உதவியது. தேசியச் சிந்தனைகளை வளர்த்துத் தேசிய விடுதலைக்கான (தனித்தன்மையை) போராட்டங்களை முன்னெடுப்பதற்கான பார்வையைத் தந்தது. இத்தகைய பார்வைகளும் தமிழகத்தில் நசிந்து சிதைந்து வந்த சிறு தொழில் கூறுகளும் தேசிய முதலாளி இனமாக உருவானது.

பிரிட்டிசு ஆட்சியின் சுரண்டல் கொடுமைகளை எதிர்த்து இந்தியத் துணைக் கண்டத்திலும், தமிழகத்திலும் போராட்டங்கள் வெடித்தன. 1918-இல் சென்னையில் தொழிலாளர் சங்கத்தைக் கட்டியபின், 1918-இல் பக்கிங்காம் ஆலை பஞ்சாலைத் தொழிலாளர்களின் போராட்டத்தினால் மூடப்பட்டது. 1919-இல் இரவுலத் சட்டத்தை எதிர்த்துக் கடையடைப்பு நடத்தப்பட்டது. 1921-இல் தொழிலாளர்கள் போராட்டம் பிரிட்டிசு மற்றும் தரகு முதலாளிகளும் கண்டு நடுங்கினர். இது வன்முறைப் போராட்டமாக உருமாறி சாதிப் போராட்டமாக திருப்பப்பட்டது. 1922-இல் நடந்த கள்ளுக்கடை மறியல் போராட்டம் மக்கள் இயக்கமாக உருவெடுத்து பிரிட்டிசுக்குப் பெரும் பொருளியல் இழப்பை ஏற்படுத்தியது. 1926-இல் பொன்மலைத் தொடர்வண்டித் தொழிலாளர் போராட்டம் 1930-இல் உப்புக் காய்ச்சும் போராட்டத்தில் 5000 தொழிலாளர்கள் பங்கு கொண்டு பெரும் போராட்டமாக மாறியது. பிற நாட்டுப் பொருட்களைத் தவிர்த்தல் பிறநாட்டுத் துணிகளை அணியக்கூடாது என்னும் போராட்டங்கள் வன்முறையாக மாறிக் கடும் தாக்குதலுக்கு உள்ளாகி நசுக்கப்பட்டன. பொதுவாக மக்களின் விடுதலைக்கான இப்போராட்டங்கள் பிரிட்டிசு ஒட்டுணி இனமான தரகு முதலாளிப் பிரிவுக்கும் தேசிய முதலாளிப் பிரிவுக்கும் ஓர் எல்லைக் கோட்டைப் போட்டன. தமிழகத்தில் பிரிட்டிசு எதிர்ப்புப் போராட்டம் மங்கித் தரகு முதலாளிகளுக்கும் தேசிய முதலாளிகளுக்கும் இடையிலான போராட்டம் முதன்மைப் போராட்டமாக மாறியது. (வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது, அங்கு சிந்திரி இங்கு முந்திரி முதலிய பார்ப்பணிய எதிர்ப்பு போராட்டம்).

1920-க்குப் பின் தேசிய முதலாளி இனம் தோன்றித் தேசிய விடுதலைகளுக்கான போராட்டத்தை முன் வைக்கிறார்கள். குறிப்பாக வ. உ. சி. நடத்திய தன்னாட்டுக் கப்பல் போராட்டமாகும். இக்கால கட்டத்தில்தான் தமிழ் இனம் ஒரு தேசிய இனமாக உருவாகித் தங்களுக்கான அரசியல், பொருளியில், பண்பாடுக்கான திட்டங்களை முன் வைத்தது. இதன் அடிப்படையில் இருந்துதான் 1929-இல் நடந்த தன்மான இயக்கத்தின் முதல் மாநாடு நடைபெற்றது. 1933-இல் கட்டாயமாகத் திணிக்கப்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டமும், 1937-இல் தமிழ் மாநிலத் தமிழர் மாநாட்டில் தமிழர்களுக்குத் தனிநாடு வேண்டும் என தீர்மான நிறைவேற்றமும் நிகழ்ந்தன. 1938-இல் மீண்டும் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் கடும் அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டது. 1938-இல் நடந்த தமிழ்நாடு பெண்கள் விடுதலை மாநாடு, தமிழர்களுக்குத் தனிநாடு கேட்டு மாநாடு. 1939இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் 1940-இல் திராவிட நாடு பிரிவினை மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாட்டில் பாகித்தான் தனிநாடு கேட்டுப் போராடிய, சின்னாவுக்கு ஆதரவு தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவ்வகையில் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கான போராட்டம் பல்வேறு வடிவில் தோன்றி வளர்ந்தன.

(தொடரும்)

# இந்திய அரசின் இரண்டகச் செயல்கள்!

தஞ்சை நலங்கிள்ளி

**இந்திய அரசு என்பது வடஇந்தியரின் நலனுக்காகச் செயல்படுகின்ற அரசேயன்றி, இந்தியத் துணைக் கண்டத்து மக்களனைவரின் நலனுக்காகவும் செயல்படுகின்ற அரசன்று.** குறிப்பாக இந்தி மாநிலங்களான வடபைதிரம் (உத்திரப் பிரதேசம்) நடுவண் பைதிரம் (மத்தியப் பிரதேசம்) ஆகிய மாநில மக்களின் நலனுக்காகவே செயல்படுகின்றது; செயல்படும்; இந்தியல்லாத காசுமீரம், வங்காளம், பஞ்சாப், அசாம் முதலிய பிறவட மாநில மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாகக் கருதுகிற தென்றால், தமிழகம், கேரளம், கருநாடகம், ஆந்திரம் ஆகிய தென்மாநில மக்களை ஐந்தாந்தர அடிமை மக்களாகவே இந்திய அரசு கருதுகிறது. **"வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது"** என்று முன்னாளில் அண்ணாதுரை அவர்கள் கூறியது அன்றும் சரி, இன்றும் சரியே. அந்நிலை மாறவில்லை, மாறப்போவது மில்லை. தமிழகம் முதலிய தென்னக மக்களை என்றென்றும் "இந்தி" ய(ா)ருக்கு அடிமைகளாக வைத்துக் கொள்வதே பேராயம் (காங்கிரசு) முதலிய அனைத்திந்தியக் கட்சிகளின் நோக்கு. (அனைத்திந்தியக் கட்சியென்றால், அது "இந்தி"க் கட்சியேதான். அவற்றின் உண்மையின் தலைமை எப்போதும் "இந்தி" யரிடமேயிருக்கும். அவர்தம் சொல்லுக்குக் கட்டுப்பட்டுத் தான் மற்றைய மாநிலத் தலைவர்கள் நடந்திட முடியும்.) எந்தக் கட்சி இந்திய (தில்லி) அரியணையில் அமர்ந்தாலும், அக்கட்சி "இந்தி" யரை ஆள்பவராகவும், மற்றையோரை — குறிப்பாகத் தமிழரை — அடிமைகளாகவும்தான் நடத்தும். அதற்காக எந்த வகையான இழி செயல்களிலும், இரண்டகச் செயல்களிலும் ஈடுபடத் தயங்காது. ஈழமக்களுக் கெதிராக — அவர்கள் தமிழர்கள் என்ற காரணியத்தால் — இந்திய அரசு செய்த, செய்கின்ற இரண்டகச் செயல்கள் மெய்த்தமிழ் நெஞ்சினர் அறிந்ததே. அதைப் பற்றி மேலும் இக்கட்டுரையில் கூறப் போவதில்லை. (ஈழத்து மக்கள் வடஇந்திய இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தால், இந்தியப் படை ஈழப் பொதுமக்களை அழித்தொழித்திருக்குமா? ஈழப் பெண்டிரைக் கற்பழித்திருக்குமா? அப்படிச் செய்திருந்தால், வட இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் "நமது படையைப் பற்றி நாம் பெருமைப் பட வேண்டும்" என ஈழத் தமிழர்மீது கொலை, கொள்ளை, கற்பழிப்பு நடத்திய காட்டுமிராண்டிகளைப் பாராட்டியிருப்பாரா?)

இராசீவின் இந்திய அரசு தமிழக மாநில அரசுக்கெதிராக இவ்வாண்டு தைத் திங்களில் (சனவரி 1988) செய்த இரண்டகச் செயல் தமிழர் யாவரும் அறிந்ததே. அச் செயலின் நுணுக்கங்களையும், உட்கோட்பாடுகளையும், கூடியே குடி கெடுக்கும் கரவுத் தன்மையையும், ஒட்டியிருந்தே ஒழித்துக் கட்ட முயலும் ஓர வஞ்சனையையும் ஆய்ந்தறிந்து, வருங்காலத்தில் நாம் செயல்பட வேண்டிய முறைகளைப் பற்றி எண்ணுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

தமிழகத்தின் முதலமைச்சராக திரு. ம. கோ. இராமச்சந்திரன் இருந்தவரையில், இராசீவும், இந்திய அரசும், பேராயக் கட்சியும் அவரைப் போற்றிப் புகழ்ந்தது. அவரது ஆட்சிக்குத் துணை நிற்பதாகக் கூறியது. (அ.தி.மு.க.—வுக்குச் சட்ட மன்றத்தில் பெரும்பான்மை யிருந்தமையில் பேராயக் கட்சியின் துணை ம. கோ. இரா—வுக்குத் தேவையே யில்லை என்பதை மறந்துவிடக் கூடாது. **தேவையே யில்லாத உதவியைத்** தான் தருவதாகக் கூறிக் கொண்டது பேராயக் கட்சி.) நடுநிலையாக, நடந்த நிலைகளை ஆராய்ந்து பார்த்தால், பேராயக் கட்சியில் (இராசீவால்) ம. கோ இரா. பெற்ற பயன்களை விட, ம. கோ. இரா—வால் இராசீவ் காந்தியும், இந்திய அரசும் பெற்ற பயன்கள் மிக, மிகப் பெரியன. இஃதிவ்வாறிருக்க, ம.கோ.இரா. காலஞ்சென்றபின், இராசீவ் வெளிப்படையாக அ.தி மு.க. பிளவுபடக் கூடாதெனக் கூறினாலும், திரைக்குப் பின்னால் மறைமுகமாக முதலமைச்சர் பதவியெனும் நப்பாசையை அ.தி.மு.க. தலைவர்களில் சிலருக்கு ஊட்டி அ தி மு.க. வின் பிரிவுக்கு வித்திட்டார். மேலும், ம. கோ. இரா—வின் மனைவியார் சானகியம்மையாருக்குத் துணைநிற்பது போலப் பாசாங்கு செய்து, அவ்வம்மையார் பிற கட்சிகளின் உதவியை நாட விடாமற் செய்து விட்டு, இறுதியில் தமிழகச் சட்ட மன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருவதற்கு ஒரே மணி நேரத்துக்கு முன்னால், பேராயக் கட்சியின் 64 உறுப்பினரும் சானகியம்மையாருக்கு துணை நிற்கமாட்டார்களென அறிவித்தார். (பேராயக் கட்சியின் 64 உறுப்பினரும் ம. கோ. இரா. இராசீவ்காந்திக்கு இட்ட இரவு (பிச்சை)தான் என்பதை மறந்து விடலாகாது. ம. கோ. இரா-வின் துணையின்றிப் பேராயக் கட்சி 64 உறுப்பினர்களைப் பெற்றிருக்கவே முடியாது.) தமக்குப் பல்லாற்றானும் துணைசெய்த ம. கோ. இரா—வின் மனைவியாரை முதமைச்சர் பதவியினின்று தெருவில் தூக்கியெறிந்தார். எல்லா வகையிலும் இராசீவுக்குத் துணைநின்ற ம. கோ. இரா—வுக்கு இராசீவ் செய்த கைம்மாறு இது.

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

இவ்வாறு இராசீவ் செய்த இரண்டகச் செயலுக்குக் கரணியம், தமிழகத்தைத் தமிழ்க் கட்சிகள் ஆளுவதை எவ்வாற்றானும் ஒழித்துக் கட்டி விட்டு வட இந்தியக் கட்சியின் ஆட்சியைத் தமிழகத்தில் ஏற்படுத்த வேண்டுமென்ற நினைப்பேயாகும். தி. மு. க.) அ. தி. மு. க. போன்ற தமிழ்க் கட்சிகள் நாம் விரும்புமளவுக்குத் தமிழுக்காகச் செயல்படா விட்டாலும், ஓரளவுக்காவது தமிழ்நலங் கருதவே செய்தன. இதுவுங் கூடப் பொறுக்கவில்லை இந்தி(ய) அரசுக்கு. தமக்கு முற்றிலும் கட்டுப்பட்ட கையாட்களே தமிழகத்திலும் அரசோச்ச வேண்டுமென விரும்புகிறது இந்திய அரசு.

இந்நேரத்தில், தமிழர்கள் இன்னுமொன்றை நினைத்துப் பார்க்க வேண்டும். தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று கூடி வட இந்தியக் கட்சிகளுக்கெதிராகப் போட்டியிட்டதென்றே வைத்துக் கொள்வோம். என்ன நடக்கும்? தமிழ்க் கட்சி தமிழக **மாநில அரசை** அமைக்கும். மேலும், **தமிழகத்திலிருந்து சொல்கிற** பாராளுமன்ற உறுப்பினரனைவரும் தமிழ் நெஞ்சினராயிருந்தாலும், தில்லியிலுள்ள இந்திய **அரசு என்றென்றும்** வட இந்தியரிடமே இருக்கும். **தமிழ்—அக மாநில அரசு** அந்த வடஇந்தியரின் அரசுக்கே **அடிபணிந்து** நடக்கவேண்டும். இதுதான் இந்திய அரசியல் சட்டத்தின் கட்டளை. இந்தியெதிர்ப்பு, ஈழவிடுதலை, தமிழ்நாட்டின் தொழில்வளப் பெருக்கம் ஆகியவற்றில் மாநில அரசு, வடஇந்தியரின் தில்லியரசின் அனுமதியின்றி ஏதும் செய்ய முடியாது. தமிழகத்தில் தமிழ் — அக அரசு அமைந்தாலும், வடஇந்திய அரசு தமிழரை ஐந்தாந்தர அடிமை மக்களாகவே நடத்தும். தமிழ் மொழியும், தமிழ்க்கலைகளும் கீழ்ப்படுத்தப் படுவதுடன், தமிழகத்தின் கல்விநிலைகள், தொழில்நிலைகள், பொருளியல் நிலைகள் அனைத்துமே வடஇந்தியரின் ஏற்றத்துக்கும், வாழ்க்கை வசதிகளுக்கும் அடிப்படையாகவே அமைக்கப்படும். **இந்தி திணிக்கப்படும்! தமிழ் தாழ்மையுறும்! நம் பண்பாடுகள் ஒழிக்கப்படும். வடஇந்தியப் பண்பாடுகள் மேன்மையுறும்! நமது பொருள் வளங்கள் வட இந்தியரின் நலனுக்கே பயன்படுத்தப்படும்!** தில்லி ஆட்சியால் அமைக்கப்படும் அலுவலகங்கள், வைப்பகங்கள், தொழிற்சாலைகளிலுள்ள நல்ல வேலைகளனைத்தும் வடஇந்தியருக்குப் போகும். தமிழர்கள் மூன்றாந்தர வேலைகளிலேயே அமர்த்தப்படுவர். பெரிய தொழில்களெல்லாம் வடஇந்தியருக்கே சொந்தமாகும். தமிழ்த் தொழிலாளர் மட்டுமல்லர், தமிழ்த் தொழிலுரிமையாளர்களும் தாழ்வுறுவர்.

சுருங்கச் சொல்வதானால், தமிழ்நாட்டின் மாநில அரசு தமிழ்க் கட்சிக்கே சொந்தமானாலும், தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற பாராளுமன்ற உறுப்பினரனைவரும் தமிழ் நெஞ்சினராகவே யிருந்தாலும், தமிழரின் அடிமை நிலை மாறாது. தேர்தல்கள் மூலமாகவோ, ஒப்புபோலைகள் (ஓட்டு) மூலமாகவே தமிழகத்தின் அடிமை நிலையை மாற்ற முடியாது. தமிழகம் இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கும் வரை இந்நிலை மாறாது. **தமிழக விடுதலை ஒன்றே இந்நிலையை மாற்றும்.** தமிழர் அனைவருமே இந்நிலைகளை அறிந்து ஆவன செய்வாராகுக!

**பின்குறிப்பு:** (இக் கட்டுரையாசிரியர் எந்தவோர் அரசியற் கட்சியையும் சேர்ந்தவரல்லர். ம. கோ. இராவுக்குச் செய்த இரண்டகத்தையே, இராசீவ் கருணாநிதிக்கோ, நெடுஞ்செழியனுக்கோ செய்திருந்தாலும் இதுபோன்றதொரு கட்டுரையை எழுதியிருப்பார்.)

# இந்தியத் தேசியம் பேசி அழிவதா? உரிமைக்காகப் போராடி வாழ்வதா?

எங்குப் பார்த்தாலும் ஏழ்மை!

மக்களை வறள வைத்து, அதன் மூலம் கொழுத்துத் திரிந்த அதிகார வகுப்பினர், நிலத்தையும் வறள அடித்துக் கொழுக்கின்றனர்.

அமெரிக்க, உருசிய வல்லாளுமைகளுக்கும், பிற வல்லரசுகளுக்கும் ஏவலாய்ப் பணியாற்றுகிற இந்திய அரசு, தானும் ஒரு துணை வல்லரசாக மாறி வருகிறது.

பல்வேறு தேசிய இனங்களின் பண்புகளை, நாகரிகங்களைச் சிதைத்து — வல்லரசுகளின் நலனுக்கானதும், தன் ஆளும் நிலைக்கு நலம் பயக்குவதுமான பண்பையும், நாகரிகத்தையும் திணிக்கிறது.

ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் இடையிலான முரண்பாட்டைக் கடுமையாகத் தூண்டிவிடுகிறது. 'இந்தியன்'—எனத் தமிழனையும், தெலுங்கனையும், மலையாளியையும், கன்னடத்துக்காரனையும், வங்காளியையும், பஞ்சாபியையும், அசாமியையும் சொல்ல வைக்கிறது.

அப்படிச் சொல்ல வைப்பதன் மூலம் இந்த நாடுகளிலெல்லாம் கிடைக்கிற கனிவளங்களையும், விளைச்சல் பொருள்களையும் கொள்ளையடித்துத் தன்னுடைய அதிகார வெறியில், கொழுத்துத் திரிகிறது.

இந்த நிலையில் தமிழனை — மலையாளியோடும், கன்னடத்துக்காரனோடும், கன்னடனை - மராட்டியனோடும், தெலுங்கனோடும், இதுபோலும் ஒருவனை - மற்றொருவனைக் கொண்டு எதிர்க்க வைப்பதின் மூலம் தன்னை நிலை நிறுத்திக் கொள்கிறது.

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

(8-ஆம் பக்கம் தொடர்ச்சி)

ஆக எந்த ஒரு தேசிய இனத்திற்கும் உரிமையற்ற நிலையில் எல்லாத் தேசிய இனங்களையும் ஒடுக்கிக் கொண்டிருப்பதோடு, சோவியத்து பின்னணியில் வங்காள தேசத்தின் மீது விரிவாளுமை செய்தது போல் இன்று அமெரிக்கா, சோவியத்து பின்னணி-யில் இலங்கையின் மீது விரிவாளுமை செய்துள்ளது.

இது போன்ற வளர்ச்சியில் இந்தத் துணைகண்டத்-தில் உள்ள மக்களின் ஏழ்மைத் தன்மைகளை, வறட்சிகளை, சாதிய முரண்பாடுகளை — சலுகைகளைக் காட்டி மூடி மறைக்கின்றது.

ஆக இந்தியாவில் உள்ள வறுமையைப் போக்க வேண்டுமானால் - மக்களின் பண்பாட்டு, கலை ஒழுக்கங்களைக் காக்க வேண்டுமானால் — மக்கள் உரிமை பெற்ற மக்கள் ஆட்சி நடைபெற வேண்டுமானால்—

இன்றைக்கு இந்தியாவில் உள்ள மக்களையெல்லாம் ஒட்ட உறிஞ்சி அரத்தம் குடித்துக் கொண்டிருக்கிற அதிகாரப் பிரிவினரின ஆட்சி அடியோடு வெட்டிச் சாய்க்கப்பட்டால் அல்லாமல் மக்கள் விடுதலை பெற முடியாது.

அந்த ஆட்சி முறை மாற்றம் இன்றைய இந்தியப் பாராளுமன்றத்தில் போய்ச் சரண்டிக் கொழுக்க, எச்சில் நாய்களாக அலைகின்ற எந்த கட்சிகளாலும் முடியாது.

மாறாக இந்த அரசியல் அமைப்பையே, எதிர்த்துப போராடி மாற்றுகிற ஒரு மக்கள் ஆட்சியால்தான — அத்தகைய அரசியல் அமைப்பால்தான் — முடியும்.

அத்தகைய அரசியல் மாற்றத்தைப் — பல்வேறு தேசிய இன முரண்பாடுகளைக் கொண்ட இன்றைய இந்தியாவில் ஒட்டு மொத்தமாகச் செய்ய இயலாது.

ஆளுகிற தேசிய இனத்தின் பாட்டாளி வகுப்பு இன்றைய புரட்சிக்கு அணியமாக இல்லாத பொழுது, அதனோடு மற்ற தேசிய இனப்பாட்டாளிகளும் இணைந்து போராட வேண்டும் என்கிற நிலை இன்றைய இனமுரண்பாடுகள் தீவிரமடைந்த நிலையில் உள்ள இந்தியாவில கற்பனையானதே.

மேலும் இன்றைய அதிகார வகுப்பு தேசிய இனங்களை ஒடுக்குவதின் மூலமே தன்னை நிலைநிறுத்திக் கொள்ளுகிற பொழுது இங்கு மக்கள் விடுதலையும், தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களை முன்னெடுப்பதின் மூலமே அமைய முடியும்.

மேலும் இங்குள்ள ஒவ்வொரு தேசிய இனமும் புரட்சிக்கு எழுந்து இந்திய ஆளும் வகுப்பை எதிர்க்கும் பொழுதே, இந்தி — இனத்தின் பாட்டாளி வகுப்பும் புரட்சியுணர்வின் தன்மை பெற்று, இந்திய ஆளும் வகுப்பை எதிர்க்கத் தொடங்கும்.

எனவே இங்குள்ள பல்வேறு முரண்பாடுகளில் மூலமான முரண்பாடு — மூலமான எதிரி - தேசிய இனங்களை நசுக்குவதின் மூலம் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்திய ஆளும் வகுப்புதான் என்பதில் எவருக்கும் ஐயம் இருக்க முடியாது.

எனவே இத்தகைய நிலையில், போலியான இந்திய தேசியம், — என்கிறதைப் பேசுகிற ஆளும் வெறிக் கொழுப்பில் கொழுத்துத் திரிகிற இந்திய அதிகார வகுப்பு பேசுவது போல அல்லாமல், நாம், அஃதாவது தமிழ் மக்கள் '**இந்திய தேசியம்**' — **என்று பேசி அழிவதா?**

**அல்லது நம் உரிமைக்காக போராடி வாழ்வதா?**

*தமிழ் மக்கள் விடுதலைக்கான மாணவர், இளைஞர் கூட்டணி.*

# காவல் துறையினரால் தளைப்படுத்தப் பெற்றுச் சிறையில் உள்ளவர்கள்!

| எண். | பெயர், அகவை | ஊர் | சிறையில் இருந்துவரும் காலம் (தோராயமாக) |
|---|---|---|---|
| 1) | இளங்கோ (21) | கரூர் | ஏப். 11 முதல் |
| 2) | ஈகவரசன் (35) | திருச்சி | மே 15 ,, |
| 3) | தென்னவன்கோ (36) (வடிவேல் இராவணன்) | ,, | மே 18 ,, |
| 4) | இளமுருகன் (23) (பாலசுப்பிரமணியன்) | ,, | சூன் 20 ,, |
| 5) | கே. வீரமணி (25) | கோவை. | ,, |
| 6) | நா. இளமாறன் (42) | சென்னை. | 24-5-88. |
| 7) | பொழிலன் (25) | சென்னை | சூன் 14 |
| 8) | முகிலன் (22) | மாத்தூர்(வ.ஆ) | ,, |
| 9) | பாண்டியன் | | மே |
| 10) | நாராயணன் (20) | | ,, |
| 11) | தெய்வமணி (23) | புதுவண்ணை (சென்னை) | மே |
| 12) | குணத்தொகையன் (35) (குணசேகரன்) | (குரோம்பேட்டை) சென்னை | 16-6-88 |
| 13) | குண்டலகேசி (29) | திருச்சி | ,, |
| 14) | பவணந்தி (21) | காஞ்சிபுரம் | ,, |
| 15) | தமிழ் இனியன் (19) | மாத்தூர்(வ-ஆ) | |
| 16) | சுகுமாறன்(சுரேஷ்)(21) | புதுவை. | ,, |
| 17) | கரிகாலன் (27) (சுப்பிரமணியன்) | பல்லடம் | 21-6-88 |
| 18) | ந. முத்துக் குமரன் (46) | ,, | ,, |
| 19) | மா. ஆறுமுகம் (46) | ,, | ,, |
| 20) | சீனி செந்தேவன் (வாசு)(29) | | ,, |
| 21) | ஈசுவரமூர்த்தி (29) | ,, | ,, |
| 22) | வள்ளுவராசன் (மூர்த்தி)(21) | | ,, |
| 23) | வியனரசு (அற்புதராசு)(31) | தஞ்சை | ,, |
| 24) | வனிதா (38) | ஆரணி | ,, |
| 25) | பிரபாகரன் | ,, | ,, |

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)
எப்படி நம்புவது? குற்றம் சொல்வதிலும் ஒரு பொருத்தம் வேண்டாமா? எவர் மேலாகிலும் எத்தகைய குற்றமும் சாட்டி விடலாமா? இது காவல் துறையினர்க்கே அடுக்காது.

இனி, இத்தகைய அச்சுறுத்தலுக்கும் அடாவடிக் குற்றச் சாட்டிற்கும் என்னதான் அடிப்படைக் காரணமாக இருக்க முடியும்? இது பற்றி நமக்குக் கிடைத்த செய்திகளையும், கடந்தகால நம் இயக்க முறைகளையும் வைத்து, ஆழமாக எண்ணிப் பார்க்கையில் நமக்கு இவற்றின் பின்னணிகள் நன்கு புலப் படுகின்றன.

தமிழகத்திலேயே நம் இயக்கம் ஒன்றுதான், இப்பொழுதைய நிலையில் மிக வெளிப்படையாகவும் துணிவாகவும் தொய்வின்றியும் தனித்தமிழ்நாட்டுக் கொள்கையை எழுதியும் பேசியும் வருகின்றது. நம்முடன் ஓரிரண்டு இயக்கங்கள் நமக்குத் துணையாக அக் கொள்கையைக் கொண்டிருந்தாலும், நம் அளவில் அவை பரவலாகவும் ஆழமாகவும், நெடிய காலமாகவும் அதை வெளிப்படுத்திக் காட்டிச் செயல்பாட்டுக்குரிய நிலையில் மக்களை ஒருமுகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு உழைக்கவில்லை.

இது தொடர்பாக நடுவணரசு நம்மேல் பல வகையிலும் குறி வைத்திருக்கிறது. ஆனால் மிகக் குறைந்த ஆற்றல் கொண்டவர்கள், பொருள்வலி வில்லாதவர்கள் என்று கணித்து, நம்மேல் கடுமையான நடவடிக்கை எதுவும் உடனடியாக எடுக்காமல் காலம் பார்த்திருந்தது. இவ் வெண்ணத்தை இங்குள்ள மூப்பனாரும் சிதம்பரமும் போன்றவர்கள் ஊதி விட்டுக் கொண்டே வந்தனர். இந்நிலையில் தான் நேருசிலை குண்டு வெடிப்பும், கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையத்தகர்ப்பு முயற்சியும் நடந்தன. அவை வெறும் வாயை மெல்லுபவனுக்கு அவல் கிடைத்ததைப் போல் இவர்களை ஆக்கி விட்டன. எனவே, இதுதான் நம்மை ஒடுக்குவதற்கும், அச்சுறுத்துவதற்கும் முடிந்தால் அழித்தொழிப்பதற்கும் அடியோடு துடைத்தெறிவதற்கும் தக்க சமையம் எனக் கருதிக் கொண்டு, அவர்கள் கருவறுக்கத் தொடங்கி விட்டனர்.

ஆனால், அவர்கள் நினைத்து எதிர்பார்த்தது போல் இந்த நிகழ்ச்சிகள் அவர்கள் நம்மைப் பழி வாங்குவதற்குரிய எத்த வலிமையையோ அடிப்படையையோ கொடுத்துவிட வில்லை என்று தெரிகிறது. ஆகவே, அவர்களின் திறமையெல்லாம் காட்டி, பொய், புளுகு, சூழ்ச்சி, பழிவாங்கும் உணர்வு, அளவுக்கு மீறிய தன்னதிகாரம், தமிழகத்தில் மாநிலச் சார்பில் ஓர் ஆட்சியில்லாத கால நிலை, ஆளுநர் பெயரால் இராசீவின் நேரடிப் பார்வையில் இயங்கும் ஆட்சித்தன்மை — இவற்றையெல்லாம் பயன்படுத்தி — எப்படியாகிலும் — எங்கேயாகிலும் — எந்த வடிவத்திலாயினும் ஒரு வலிவான சான்று கிடைத்து விடாதா, என்று நூற்றுக் கணக்கான ஒற்றுத்துறைக் காவலர்களைத் தமிழகம் முழுவதும் அனுப்பி, பல நூற்றுக் கணக்கான தென்மொழி, தமிழ்நிலம் அன்பர்களையும், உ.த.மு.க. ஆர்வலர்களையும், பல்வேறு கோணங்களில், பல்வேறு வகையாகத் துருவித் துருவி, ஒன்றுக்குப் பத்து முறை, வாய்வழியாகக் கேட்ட விளக்கங்களுடன் நில்லாது, அங்கங்கு, அவரவர்களின் விடுகளுக்குள் புகுந்து, ஆராயவும் ஆள் தேடவும் செய்திருக்கின்றனர்.

பொதுவாகக் குற்றஞ் செய்வர்கள் எல்லாரும் ஒரே தரத்தினராகவோ, ஒரே அறிவினராகவோ ஒரே வகைப்பட்ட பண்பினராகவோ இருக்க முடியாது. காவல் துறையினருக்கு முதலில் இதுபற்றிய அறிவும் தெளிவும் தேவை. இவர்கள் அணுகிப் போன நம் இயக்கத்தினர் அனைவரும் நல்ல பண்பாளர்கள்; படித்தவர்கள்; அறிஞர்கள் அவர்கள் இளைஞர்களாகவே கூட இருந்திருந்தாலும், மற்ற அரசியல் கட்சிகளைச் சார்ந்த இளைஞர்களைப் போல் இவர்கள் இருந்திருக்க மாட்டார்கள் என்பது அந்தக் காவலர்களுக்கே தெளிவாகத் தெரிந்திருக்கும். அவ்வாறிருக்கையில், அவர்களை ஏதோ திருடர்களைப் போலவும், கொள்ளையர்களைப் போலவும், கொலையாளிகளைப் போலவும் குமுகாயக் கொடியவர்களைப் போலவும் கருதிக் கொண்டு, காவல் துறை பல இடங்களில் அவர்களிடம் கடுமையாகவும் முரட்டுத்தனமாகவும் நடந்திருக்கிறது என்றால், அதற்கு என்னபொருள் என்பதை நம்மால்விளங்கிக் கொள்ளவும் முடியவில்லை; பொறுத்துக்கொள்ளவும் முடியவில்லை. நம்முடைய, கடந்த நாற்பதாண்டுக்காலப் பொதுத் தொண்டில், இந்த அளவில் காவல் துறை நம்மிடமோ, நம் இயக்கத்தவரிடமோ, எப்பொழுதுமே நடந்து கொண்டதிலை. எனவே; இது மேலிடத்தவரின் அதிகாரக் குறுக்கீட்டால், சூழ்ச்சித்தனமாக, நம் இயக்கத்தையும், இதன் அடிப்படையான தனித்தமிழ் நாட்டுக் கொள்கையையும் அடியோடு துடைத்தழிக்க வேண்டும் என்னும் தூண்டுகோலின் அடிப்படையில் செய்யப் பட்டதாகவே நாம் கருதவேண்டியிருக்கிறது. இதில் பிழையிருக்க முடியாது.

ஏதேதோ காரணங்களைக் காட்டி, நம் உ.த.மு.க. வின் தூண்களாகக் கருதப்படும் அனைவரையும் தளைப்படுத்திச் சிறைகளில் அடைத்துள்ளது காவல்துறை; அஃதாவது ஆளுநர் ஆட்சி. (சிறையில் உள்ளவர்களின் பெயர்ப்பட்டியல் வேறொரு பக்கத்தில் அச்சாகியுள்ளது) கடந்த இரண்டு மாதங்களாக இவர்கள் காவல்துறைக் கட்டுப் பாட்டுக்குள்ளேயே இருக்கின்றனர். இன்னும் குற்ற அறிக்கை கொடுக்கப்பட்டு, இவர்களை வழக்குக்குக்

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் தலைமையமைச்சரும் மன மகிழ்ச்சி யோடு (உல்லாசமாக) வாழ்கிறார். பிள்ளைகளைப் பெற்ற பின்னர் தேன் நிலவிற்குச் சென்றார். பல கோடிகள் பணம் மக்கள் வரியிலிருந்து செலவு.

(தொடரும்.)

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வரவில்லை. மூன்று மாதம் வரையில் இவர்களை அப்படி வைத்திருக்கலாம் எனினும், இவர்களைப் பற்றிய நடவடிக்கை அவ்வாறு சிக்க லானதோ பெரிய அளவில் ஆராயப்பட வேண்டியதோ அன்று. இவர்களையும் இவர்கள் வழி இவ் வியக்கத்தினரையும் அச்சுறுத்தி அலட்டி உலட்டி இக்கொள்கை, இயக்கம் இவற்றினின்று அப்புறப் படுத்தவேண்டும் என்பதே இவர்களுக்கு மறைமுகக் கட்டளையிடுபவர்களின் நோக்கம் என்பது தெளி வாகத் தெரிகிறது.

காவல்துறையின் அச்சுறுத்தலான நடவடிக் கைகளால் **தென்மொழி, தமிழ்நிலம்** படிப்பவர்களி டையில் ஒரு பெரிய மாறுதலே ஏற்பட்டிருக்கிறது என்பது மிகவும் வருத்தத்திற்கும் கவனத்துக்கும் உரியது. இவற்றைத் தொடர்ந்து படித்து வந்த பலபேர் இவற்றை வாங்கவும் — ஏன் கையில் வைத்திருக்கவுமே—அஞ்சி, இவற்றை 'வேண்டாம்' என்று தெரிவித்து, அனுப்பிய இதழ்களைத் திருப்பி விட்டார்களென்றால், நாம் அவர்களை நொந்து கொள்வதா, அவர்கள் இப்படி நடக்கக் காரண மாக இருந்த காவலர்களை நொந்து கொள்வதா? இப்படியேதான் விற்பனையாளர்கள் சிலரும் தங்கள் விற்பனையைத் தவிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் இந்த நிலைகளைப் பற்றி நாம் என்ன நினைப்பது? இதனால் இரண்டு இதழ்களிலும் கணிச மான படிகள் குறைந்து போயின என்பதை வருத் தத்துடன் இங்குக் குறிப்பிட வேண்டியுள்ளது.

இவையத்தனைக்கும் இடையில் நம்மைப் பற்றி இன்னொரு செய்தியையும் நாம் கேள்விப் பட்டோம். அஃதாவது நம்மை, ஏதாவது ஒரு காரணம் காட்டி, உடனே தளைசெய்து, சேக் அபதுல்லாப் போல, நிலையாகத் தொடர்ந்து சிறையில் வைப்பதற்கு, அமைச்சர் சிதம்பரமும், மூப்பனாரும் காவல்துறை யினரை வற்புறுத்தி வருவதாகத் தெரிகிறது. ஆனால், எந்த அடிப்படைக் காரணமும் கிடைக்க வில்லை என்பதாலோ, அல்லது நம்மைச் சிறையில் வைப்பதால் ஏதாவது எதிர் விளைவுகள் நேரலாம் என்பதாலோ அதிகாரிகள் தயங்குவதாகவும் தெரி கிறது. காலம் எப்படிக் கட்டளையிடுகிறதோ? தெரியவில்லை; எனினும் நாம் அதற்குக் காத் திருப்போம்.

ஆனால் ஒன்று மட்டும் உறுதி, இந்தக் கால கட்டத்தை உணர்ந்து கொண்டு, நம் தமிழினம் ஒன்றுபட வில்லையென்றாலும், உணர்வு பெறவில்லை யென்றாலும், இது படிப்படியாக வைத்துக் கொண் டிருக்கும் மீதி மிச்சங்களையும் இழந்து அழிந்து போக வேண்டியதுதான்; இல்லையெனில் தன் அச்சு அடையாளங்களை மாற்றிக் கொண்டு இந்திய வட நாட்டுப் பார்ப்பனிய, இந்துமதத் தேசிய உருவாக் கத்தில் கரைந்துபோக வேண்டியதுதான். ஆனால், இதைப் பற்றியெல்லாம் இன்று யாரும் கவலைப் படுவதாகத் தெரியவில்லை என்றே சொல்லியாக வேண்டியிருக்கிறது. எண்ணிப் பாருங்கள்!

(12- ஆம் பக்கத் தொடர்ச்சி)

*ஒன்றுதான், இரண்டாதான்,*
*இவனுடைய உள்ளத்தில்*
*ஊறித்தான் கிடக்கின்ற*
*வெறிகள் தாமே!*
*ஒன்றில்லை, பலவினங்கள்*
*வாழுந்துணைக் கண்டத்தை*
*ஓர்நாடாய் ஆக்குகிற*
*வெறியி னோடே,*

*என்றென்றும் அந்நாடும்*
*ஆரியத்தின் ஆட்சிக்குள்*
*இருந்திடவே வேண்டுமெனும்*
*வெறியும், இன்னும்*
*இன்றிங்கே இருக்கின்ற*
*இனத்தினர்கள் அனைவரையும்*
*இந்தியராய் மாற்றுகிற*
*வெறியும் கொண்டோன்!*

*இந்தியா எனும் செயற்கை*
*நாட்டைநிலை நாட்டுகிற*
*வெறியோடு இந்துமத*
*வெறியும் உள்ளோன்!*
*இந்தியெனும் மந்திமொழி*
*தனையுலக மொழியாக்க*
*இவனிடத்தில் இருக்கும்வெறிக்*
*களவே இல்லை!*

*இந்திவெறி யோடுசமற்*
*கிருதத்தை மூத்தமொழி*
*எனநாட்டும் வெறிக்கேதான்*
*எல்லை இல்லை*
*நந்தமிழர் கொலைவெறியில்*
*செயவர்த்தன் தன்னைவிட*
*நனிபெரிய படுவெறியன்*
*இராசீவ் தானே!*

## வழக்குக் கொடை!

சிறையில் உள்ளவர்களை வெளியில் கொணரவும், வழக்கு நடத்தவும் பொருளு தவி செய்யுங்கள். ஆசிரியர், தமிழ்நிலம்.

Scanned with CamScanner

# இராசீவ்!

பாவலர். கொ. செ. சின்னப்பனார்.

தமிழரிடம் வெறுப்புணர்வும்
காழ்ப்புணர்வும் பகையுணர்வும்
சாய்த்தொழிக்கும் வெறியுணர்வும்
மிகவும் கொண்டோன்.
தமிழர்களை என்றென்றும்
அடிமைகளாய் வைத்திங்கே
தன்னினத்தை ஆளவைக்கும்
எண்ணம் உள்ளோன்!

தமிழினத்தின் மொழி, கலையைப்
பண்பாட்டை வரலாற்றைத்
தொல்சிறப்பை மறைத்திடவே
முயற்சி செய்வோன்;
தமிழினத்தார் இவன் நினைப்பிற்
கிணங்கிவர வில்லையெனில்
தயங்காதோன் அழித்தொழிக்க
இராசீவ் தானே!

தன்மானம் மறந்திடுவான்
தன்மதிப்பைத் துறந்திடுவான்;
தமிழினத்தை அழிப்பாரோ
டுறவு கொண்டே,
சொன்னபடி கேட்டிடுவான்;
அடிமைபோல நடந்திடுவான்;
துணையாகி அவர்க்குதவி
செய்தே நிற்பான்!

என்னவிலை அறமென்பான்;
எவண் கிடைக்கும் என்பான்; தன்
இனமேதான் உயர்ந்ததெனும்
தருக்கே மிக்கோன்!
மன்னனிவன் சூழல்களைச்
செய்வதிலும் மறைப்பதிலும்
மலையுச்சி, மலையுச்சி,
இராசீவ் தானே!

திமிரினிலே பனிமலைதான்;
கொழுப்பினிலே மாக்கடல்தான்;
தமிழ்க்குமுகப் பெரும்பகைவன்
இவனே தான் தான்!
அமைந்திருக்கும் உளச்செருக்கில்
வான்முகடும், வல்லொற்றை
ஆட்சிவெறி யில்விரி வான்,
இவன்தா னுவான்!

சமயம்பார்த் தீழத்தன்
னுட்சிதனைத் தடுத்ததொடு
தமிழரையங் கழிக்கின்ற
பாறை நெஞ்சன்!
நமதுரிமைக் கண்கொத்தும்
கண்கொத்திப் பாம்பிவனை
நினைவினிலே வைத்திடுவீர்
மறவா தீரே!

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!
1) தாய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 25

பிறர் நம்மை வீழ்த்துவது கொடுமையாகாது; நம்மை நாமே வீழ்த்திக் கொள்வதுதான் மிகக் கொடுமையானது.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 107:

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;
உறுப்பினர்:
தனி இதழ் விலை உரு. 1-00
ஆண்டுக் கட்டணம் உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 25-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5;

TN/MS (C) 657